**செய்தி வெளியீடு எண்:381** **நாள்: 20.06.2017**

**தமிழ்நாடு அரசு**
**சாலை பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்**
**சேப்பாக்கம், சென்னை 5.**
**பத்திரிக்கை செய்தி**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் மாநில சாலைப் பாதுகாப்புக் குழு கூட்டம் 06.06.2017ம் நாளன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், நிதித்துறை செயலர், நெடுஞ்சாலைத் துறை செயலர், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர், போக்குவரத்துத் துறை செயலர், காவல் துறை இயக்குநர், சென்னை பெருநகர காவல் ஆணையர் மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழுவின் பரிந்துரையினை ஏற்று கீழ்க்காணும் போக்குவரத்து விதிமீறல்களுக்கு சம்பந்தப்பட்ட ஓட்டுநர்களின் ஓட்டுநர் உரிமங்களை தற்காலிக/நிரந்தர இரத்து செய்யுமாறு இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

1. வாகனத்தை அதிவேகமாக இயக்குதல்.
2. சிவப்பு விளக்கை தாண்டுதல்.
3. குடிபோதையில் வாகனம் இயக்குதல்
4. வாகனத்தை இயக்கும்பொழுது செல் போனை பயன்படுத்துதல்.
5. சரக்கு வாகனங்களில் அதிக பாரம் ஏற்றுதல் / சரக்கு வாகனங்களில் ஆட்களை ஏற்றுதல்.

உயிரிழப்பு ஏற்படுத்திய வாகன ஓட்டுநர்களின் ஓட்டுநர் உரிமங்களை திரும்பப் பெறுவதற்கு முன்பாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகத்தினரால் நடத்தப்படும் பயிற்சி மையங்களில் இரண்டு நாள் புத்தாக்கப் பயிற்சியினை அவரவர்களின் சொந்த செலவில் மேற்கொண்டு உரிய சான்றினை பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற சாலை விபத்துக்களில் ஏறத்தாழ 40 விழுக்காடு உயிரிழப்புகள் தலைக்கவசம் அணியாமல் இரு சக்கர வாகன ஓட்டிகளால் ஏற்பட்டதாகும். எனவே இரு சக்கர

வாகன ஓட்டிகள் மற்றும் பின்னால் அமர்ந்து செல்லும் பயணியும் கட்டாயமாக தலைக்கவசம் அணிய வேண்டும் என சாலைப் பாதுகாப்புக் குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தலைக்கவசம் அணியாமல் இருசக்கர வாகனம் ஓட்டிச் செல்லும் வாகன ஓட்டிகளை அருகாமையில் உள்ள தாலுகா காவல் நிலையம் / வட்டாரப் போக்குவரத்து அலுவகம் அழைத்துச் சென்று குறைந்த பட்சம் இரண்டு மணி நேரம் விழிப்புணர்வு பற்றிய பயிற்சி கொடுக்கப்பட வேண்டும் அத்துடன் உரிய அபராதத்தையும் வசூலிக்க வேண்டும்,

மேலும் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் காவல் துறையின் நெடுஞ்சாலை ரோந்துப் பணி வாகனங்கள் அதிக அளவில் ரோந்துப் பணி மேற்கொண்டு அச்சாலைகளில் நடைபெறும் விபத்துகளுக்கு பொறுப்பேற்க வேண்டும் என இக்குழுவில் முடிவெடுக்கப்பட்டது.

சாலை அமைக்கும் பணி நடைபெறும் போதோ அல்லது மின்சார வாரியம், குடிநீர் வழங்கல் துறை, தொலைபேசித் துறை போன்ற துறைகள் சாலையை சீரமைக்கும் பணி நடைபெறும்போது இந்திய சாலை காங்கிரஸ் பிறப்பித்துள்ள உரிய வழிமுறைகளை கையாளுமாறு சம்பந்தப்பட்ட துறைகளை கேட்டுக் கொள்ள வேண்டுமென இக்குழு வலியுறுத்தியுள்ளது. தவறும்பட்சத்தில் சாலை அமைக்கும் பணி ஒப்பந்ததாரர்கள் மீது காவல் துறையினரால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமாறு இக்குழு கேட்டுக் கொண்டது.

மூன்றாம் நபர் காப்பீட்டுச் சான்றிதழ் இல்லாமல் இயங்கும் வாகனங்களை சிறைபிடித்து உரிய சான்றிதழ் வழங்கிய பின்னர் வாகனங்களை விடுவிக்கலாம் என குழு கேட்டுக் கொண்டுள்ளது.

வாகன ஓட்டிகள் அனைவரும் வாகனத்தை ஓட்டும் போது அசல் உரிமம் வைத்திருக்க வேண்டும். சோதனை அலுவலர்கள் ஆய்வின் போது அசல் உரிமத்தைக் கட்டாயம் காண்பிக்கப்பட வேண்டும்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**